தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்

# ஆராய்ச்சி என்றால் என்ன, பங்கேற்பு ஆராய்ச்சி ஏன் அவசியம்?




உங்கள் விழிப்புணர்வை விரிவுபடுத்தவும், புதிய பாதைகளை உருவாக்கவும், புதிய சாத்தியக்கூறுகளைத் திறக்கவும் நீங்கள் தயாரா?

| | | |
|---|---|---|
| **வெளியீடு** | : | சமூக மாற்றத்திற்கான பங்கேற்பு செயல்வழி ஆராய்ச்சி |
| **வெளியிடப்பட்ட ஆண்டு** | : | ஆகஸ்ட் 2025 |
| **வெளியீட்டு நிறுவனம்** | : | தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் |
| **முகவரி** | : | இல.10 மல்வத்த வீதி நீர்கொழும்பு |
| **தொலைபேசி** | : | **+94 312239750 +94 773184532** |
| **வெளியீட்டு எண்** | : | **81** |
| **தலைமை ஆசிரியர்** | : | ஹர்மன் குமார |
| **ஆசிரியர் குழாம்:** | : | லக்சிரி பர்னாண்டோ<br>கயான் லக்ஷான்<br>ரனுல்யா ஜயசிங்க<br>நாலக ரோசைரோ<br>சப்னால் ஹலீல் |
| **பக்க வடிவமைப்பு** | : | லக்சிரி பர்னாண்டோ |
| **அச்சிடுதல்** | : | |

**உள்ளடக்கம்**


- அறிமுகம்
- ஆய்வு என்றால் என்ன?
- பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வு ஏன் முக்கியமானது?
- மீனவ சமூகமாக தங்களுடைய தொடக்க முயற்சிகளின் அத்தியாவசியம்
- ஆய்வுச் செயற்பாட்டு அலகு அறிமுகம்: யேுகுளுமு உடன் பங்கேற்பு ஆய்வை மேப்படுத்தல்
- ஆய்வுச் செயற்பாட்டு அலகு மூலம் பங்கேற்பு ஆய்வை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற அடிப்படை நோக்கங்கள்
- எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்

## அறிமுகம்

**“ஆர்வம் என்பது வெற்றியின் இயந்திரம்.” - கென் றொபின்சன்**




புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வது எவ்வாறு எனவும். அல்லது புதிய முறைகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எவ்வாறு எனவும், நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இதற்கான விடை ஆய்வில் உண்டு ஆனாலும் சரியான முறையில் ஆய்வு என்பது என்ன? அது புதிய கருத்துக்கள், முறைகள் மற்றும் நுண்ணறிவுத்திறனை/அகத்தறிதிறன் விருத்தி செய்வதற்கான புதிய அறிவை உருவாக்குவதற்கான செயன்முறை அல்லது தற்போதுள்ள அறிவை ஆக்கபூர்வமாக மீளுருவாக்கும் செயன்முறையாகும். சுருக்கமாக, அது எங்களை முன்னோக்கி நகர்த்துகின்றதும், தீர்வுகளைக் கண்டுபிடிப்பதற்கும், தெரியாதவற்றை ஆராய்ச்சி செய்வதற்கான பயணமாக அமையும்.

ஆய்வுச் செயன்முறையானது, ஆய்வுகூடங்களின் சுவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படாமல், அது எந்தவொரு இடத்திலும் இடம்பெறலாம். அது களநிலையில் அல்லது. சமூகத்தில் அல்லது, அன்றாட அனுபவங்கள் மூலமாகவோ அல்லது, ஆர்வத்திற்கும் படைப்பாற்றலுக்கும் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆய்வுகள் இடம்பெறும்.

வெண்ணிற ஆடைகளை அணிந்த விஞ்ஞானிகள் பரிசோதனைக் குழாய்களுடன் பரிசோதனைகளைச் செய்கின்ற ஆய்வுகூடங்களில் மாத்திரமன்றி, அதற்கப்பாற்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ள முடியுமாயின், அவை எவ்வாறான ஆராய்ச்சிகளாக அமைய வேண்டும்? பங்கேற்பு செயற்பாட்டு ஆராய்ச்சி (Participatory Action Research) இங்குதான் உருவாக்கப்படுகின்றது. அதனை எந்தவொரு ஆய்வுகூடத்திலும் மீளுருவாக்கம் செய்ய முடியாத அறிவையும் நுண்ணறிவையும் பயன்படுத்தி, உண்மையாகவே உலகில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு புரட்சிகரமான தீர்வுகளைக் கண்டறிவதற்கு சமூகத்தவர்களை வலுவூட்டுகின்றது. நாம் வாழும் ஒட்டுமொத்த சமூகமே இறுதியில் ஆய்வுக் களமாக அமையும்.

அதனால், நாங்கள் எடுக்கின்ற இம்முயற்சியில், முதலில் ஆய்வின் அடிப்படை விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும். மேலும், பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வின் மூலம், எங்களுக்கும் அதேபோல் எங்களுடைய சமூகத்திற்கும் உண்மையாகவேயுள்ள முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான சந்தர்ப்பங்களை நாம் ஆராய்தல் வேண்டும்.

அதற்கமைய, பங்கேற்பு செயற்பாட்டு ஆராய்ச்சி : ஆர்வம் மற்றும் அர்த்தமுள்ள மாற்றத்திற்காக ஒரு கூட்டான ஆராய்ச்சியாக மாற்றுவது எவ்வாறு? என்பதைத் நாம் தேடி அறிந்து கொள்வதற்குத் தயாராகுவோம்.

### ஆய்வு என்றால் என்ன?

ஆய்வு என்பது, அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான ஆக்கபூர்வமானதும் முறைசார்த்த வகையிலுமான செயற்பாடாகும். பக்கச்சார்பு மற்றும் தவறான மூலாதாரங்களைக் கட்டுப்படுத்தல், விசேடமாகக் கவனம் செலுத்தி பிரித்துணரக்கூடிய விடயத்தலைப்புக்கள் பற்றிய அறிவை அதிகரிப்பதற்கான சான்றுகளை ஒருங்கு திரட்டுதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் போன்றன உள்ளடங்கும்.

எளிமையாகக் கூறினால், எங்களுக்குத் தீர்வுகாண வேண்டிய பிரச்சினையை சிந்திக்கவும். ஆய்வு என்பது அந்தப் பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்காக நாங்கள் பயணிக்கின்ற பாதையாகும். இப்பயணப்பாதையில் முக்கிய படிமுறைகள் சில் உள்ளடங்கும். அதாவது,

01. **வினாத் தொடுத்தல்:** எந்தவொரு விடயமும் வினாவுடனேயே ஆரம்பிக்கின்றது. உதாரணமாக, “பிளாஸ்ரிக் கழிவுகளைக் குறைப்பது எவ்வாறு?” அல்லது “ஒருசில நோய்கள் உருவாவதற்கான காரணங்கள் என்ன?” அவ்வாறான கேள்விகளாக அமை.பலாம்.

02. **தகவல்களைத் திரட்டல்:** நமது பிரச்சினையை நாங்கள் கண்டறிந்தவுடன் அடுத்த படிமுறையாக அமைவது அதனை தீர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான தகவல் திரட்டலாகும். அதற்கு நூல்களை வாசித்தல், பரிசோதனைகளை நடாத்துதல் அல்லது குறித்த விடயத்தலைப்பைப் பற்றிய அறிவு கொண்டவர்களுடன் உரையாடல் போன்றன உள்ளடங்கும்.

03. **தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்** : தகவல்களைத் திரட்டிய பின்னர், போக்குகளையும் நுண்ணறிவையும் கண்டறிவதற்கு, நாங்கள் அதனை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். தரவுகள் மூலம் எங்களுக்கு தெரிய வருவது என்ன? அத்துடன் அத்தகவல்கள் மூலம் எங்களுடைய பிரச்சினைக்குப் பதில் கிடைக்கின்றதா? என்பதைப் புரிந்து கொள்வதற்கு இது எமக்கு உதவியாக அமையும்.

04. **முடிவுகளை எட்டுதல்** : பரிசோதனைகள் மூலம் கிடைக்கின்ற நுண்ணறிவுத்திறன் அல்லது அகவறிவுத்திறன் எனக் கூறலாம். ஆய்வொன்றின் போது கற்றுக்கொள்கின்ற அனைத்தும் இறுதிகூற்றின் மூலம் சருக்கமாகக் கூறலாம். மிகவும் சரியாகவும், ஆராய்ச்சியின் முடிவானது, ஊகங்களை நிரூபிப்பதாகவோ அல்லது நிராகரிப்பதாகவோ அமையும்.

05. **பெறுபேறுகளைப் பகிர்ந்து கொள்ளல்** : இறுதியாக நாங்கள் கற்றுக்கொண்டவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதாகும். இதனை அறிக்கைகள் மூலமும், சமர்ப்பணங்கள் மற்றும் உரையாடல் மூலம் மேற்கொள்ளலாம்.

மருத்துவ விஞ்ஞானம் தொடக்கம் சமூகப் பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் காணப்படும் பல்வேறு துறைகளில் ஆய்வுகள் பயன்படுத்தப்படுகின்றன. அது எங்களுக்குப் புதிய விடயங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும், சிக்கலான பிரச்சினைகள் பற்றிய எமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கும், மாற்றத்தை ஏற்படுத்துகின்ற தீர்வுகளை உருவாக்குவதற்கும் ஏதுவாக அமையும்.

அதனால், விடயங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்ற ஆர்வத்துடன் நாங்கள் இருந்தால், பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முயற்சித்தால், அல்லது உலகத்தைப் பற்றி மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு முயற்சித்தால், ஆய்பு என்பது, புதிய அறிவைக் கண்டுபிடிப்பதற்கும் அறிவார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும் எங்களுக்கு ஒரு செயற்கருவியாக (Tool) அமையும்.

### ஆய்வு முறையாக அமையும் பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வு முறை (PAR) ஏன் அவசியமானது?

பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வு (PAR) என்பது, ஆய்வில் நேரடியாகத் தொடர்புபடும் நபர்களை ஈடுபடுத்தி உள்வாங்கலுடன கூடிய செயன்முறை மற்றும் பயனுள்ளதாக மாற்றுகின்ற விசேட ஆய்வுச் செயற்பாடாகும். ஆனாலும், இவ் அணுகுமுறை குறிப்பிடுமளவுக்கு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது? எங்களுக்கு அதனை வளிமையான முறையில் தெளிவுபடுத்தலாம்.

**"அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்புபடுவர்"**

மரபுரீதியான ஆய்வுகளின் போது, ஆய்வாளர்கள் பொதுவாக தனித்து இயங்குவார்கள். அதாவது, ஆய்வாளர்களுக்கும் அதிகமாகப் பாதிப்புக்குள்ளாகிய சமூகத்தவர்களுக்கும் இடையில் நேரடித் தலையீடுகளைக் காணமுடியாது. பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வின் போது, நபர்கள் ஆய்வுச் செயன்முறையில் முனைப்பாகப் பங்கெடுப்பதன் மூலம் இதனை மாற்றலாம். அதாவது அவர்களுடைய அனுபவங்கள், தலையீடுகள் மற்றும் தேவைகளை ஆரம்பத்திலிருந்தே கருத்தில் கொள்ளப்படும்.

**"உண்மையான நுண்ணறிதிறன்/அகவறிதிறன் காணப்படும்"**

பாதிக்கப்பட்ட சமுகத்தவர்களை நேரடியாக இணைத்துக் கொள்வதன் மூலம், பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வின் மூலம் பெறப்படும் தகவல்கள் மற்றும் தீர்வுகள், உண்மையான உலக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும். இவ் அணுகுமுறையானது, ஆய்வாளர்கள் சூழமைவை மிகவும் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கும், மற்றும் அவற்றைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு நடைமுறைச் சாத்தியமானதாகவும், ஏற்புடைய தீர்வுகளை விருத்தி செய்து கொள்வதற்கும் ஏதுவாக அமையும்.

**"சமூகத்தை வலுவூட்டல்"**

பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வில் அவதானிப்புக்கள் மாத்திரமன்றி சமூகத்தின் ஒத்துழைப்புக்களும் காணப்படும். மேலும் சமூகத்தவர்களுக்காகக் குரல் கொடுப்பதன் மூலம் மற்றும் தீர்மானம் எடுக்கும் போது அவர்களையும் பங்கேற்கச் செய்வதன் மூலம் வலுவூட்டப்படும். இது மிகவும் நம்பிக்கையானதும், மிகவும் பயனுள்ள தீர்வுகளும் மற்றும் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டமைந்த உரித்துப் பற்றிய பொறுப்புணர்வையும் ஏற்படுத்தும்.

**"பொது நோக்கங்களை அடைவதற்காக நபர்கள் அல்லது குழுவினர்களுக்கிடையே ஒத்துழைப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் வசதிகளை வழங்கல்"**

மரபுரீதியான ஆய்வுகளின் போது, தொடர்பாடலானது, ஆய்வாளர்களுக்கும். அவர்களுடைய அறிக்கைகளில் மாத்திரமே காணலாம். ஆயினும், பங்கேற்பு ஆய்வின் போது, ஆய்வாளர்களுக்கும் பங்குபற்றுநர்களுக்கும் இடையில் திறந்த கலந்துரையாடல்களை ஊக்குவிக்கின்றது. இவ் ஒத்துழைப்புக்கள் பெரும்பாலும் மிகவும் புதிய கருத்துக்கள் மூலம் சிறப்பாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் வழிவகுக்கும்.

**“ஏற்புடையதன்மை மற்றும் விளைவுகளை அதிகரிக்கும்”**

பல்வேறுபட்ட செயற்பாடுகளின் விளைவாக உருவாகும் பெறுபேறுகளில் தாக்கம் செலுத்துகின்றவர்களுடன் கூட்டாக ஆய்வுகளை மேற்கொள்ளும் போது, கண்டுபிடிப்புக்கள் சமூகத்தின் உண்மையான தேவைகளையும் விருப்பங்களையும் விழித்துக் கூறுவதற்கு இயலும். அதன்மூலம் ஆய்வானது மிகவும் ஏற்புடையதாக அமைவதுடன், பெறுபேறுகளும் மிகவும் விளைவுகளுடன் கூடியதாக அமையும்.

எளிமையாகக் கூறுவதாயின், பங்கேற்புச் செயற்பாட்டு ஆய்வானது, ஆய்வாளர்களுக்கும், ஆய்வு செய்கின்ற சமூகங்களுக்கிடையே இடைவெளி குறைவாக இருப்பதையே அதன் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது. அது ஆய்வில் பங்கெடுக்கின்ற அனைவரையும் மதிப்பீடு செய்கின்ற கூட்டு முயற்சியாகவும் அமையும். அத்துடன் மிகவும் பயனுள்ளதும் அர்த்தமுள்ளதுமான தீர்வை நோக்கியதாகவும் அமையும். எங்களுடைய உள்ளூர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முனைவதாயின், அல்லது விரிவான பிரச்சினையொன்றை ஆய்வு செய்வதாயின், பங்கேற்பு ஆய்வானது, தங்களுடைய நுண்ணறிதிறனை மாத்திரமன்றி, நுண்ணறிதிறன் தேவையானவர்களுக்கு நடைமுறை ரீதியாகவும், பயனை உறுதி செய்வதாகவும் அமையும்.

**மீனவ சமூகமாக தங்களுடைய தொடக்க முயற்சிகள் அத்தியாவசியமானது**

மீன்பிடி முகாமைத்துவத்திலும், தீர்மானம் எடுக்கும் செயன்முறையிலும் மரபுரீதியாக மேலிருந்து கீழ்நோக்கிய தலையீடுகள் போதுமானதாக இல்லையென்பதே தர்க்க ரீதியாக ஒருமித்த கருத்துண்டு.

**“விஞ்ஞானத்தையும் உள்ளூர் அறிவையும் தொடர்புபடுத்தல்”**

சமுதாய அடிப்படையிலான ஆய்வுகள், உள்ளூர் சமூகங்களின் அறிவு மற்றும் அனுபவங்களுடன் அறிவியல் நுட்பங்களையும் ஒருங்கிணைக்கிறது. இம்முயற்சிகள் ஆய்வுகளின் போதான துல்லியத்தன்மையை அதிகரிப்பது மாத்திரமன்றி மீனவர்கள் மற்றும் பிற குழுக்கள், கடல் மற்றும் நன்னீர் சூழலுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன எனவும், எமது புரிதலையும் அது அதிகரிக்கச் செய்கின்றது. உள்ளூர் அறிவை மதிப்பீடு செய்வதன் மூலம், முக்கியமாக சுற்றாடல் தொகுதிகளை முகாமைத்துவப்படுத்தல் பற்றிய ஆழமானதும் நுணுக்கமானதுமான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

**“சமூகத் தேவைகளுக்கமைய கொள்கை வகுப்புக்களை அதிகரித்தல்”**


சமுதாய அடிப்படையிலான ஆய்வுகளில் ஒரு முக்கிய நன்மையாக அமைவது, அதிகமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான தேவைகளுடன் முகாமைத்துவக் கொள்கையைத் தயாரிப்பதற்குரிய திறனாகும். உள்ளூர் சமூகங்ககளை ஆய்வுச் செயன்முறையில் ஈடுபடுத்துவதன் மூலம், கொள்கைகள் விஞ்ஞான ரீதியாக அமைவது மாத்திரமின்றி, நடைமுறை ரீதியாகவும் அவர்களுடைய அன்றாட வாழ்வில் ஏற்புடையதாக அமைவதையும் உறுதி செய்கின்றது.

**“நிலைபேறான நடைமுறைகளை மேம்படுதல்”**

சமூகங்கள் நேரடியாக ஆய்வுகளில் பங்கெடுப்பதால் முகாமைத்துவ மூலோபாயங்களை விஞ்ஞான ரீதியாக எடுத்தியம்புவது மாத்திரமன்றி, நடைமுறை ரீதியாகவும் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்தவும் ஏதுவாக அமையும். உள்ளூர் மக்கள் தீர்மானமெடுக்கும் செயன்முறையில் பங்கெடுக்கும் போது. முன்மொழியப்படுகின்ற தீர்வுகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்குவதற்கும், அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. இவ் ஒத்துழைப்புக்கள் நீண்டகால நிலைபேற்றுத் தன்மைக்கு தீர்மானம்மிக்க உரிமை மற்றும் பொறுப்புணர்ச்சியை உருவாக்கும்.

**“நீதியையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தல்”**

சமுதாய அடிப்பனடயிலான ஆய்வுகள் என்பது, வெறுமனே தரவுகள் திரட்டுவதற்கு அப்பாலான விடயமாகும். ஆய்வுச் செயன்முறையில் உள்ளூர் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள சமூகத்தவர்களை ஈடுபடுத்துவதன் தலையீடுகள் மூலம், அவர்களுடைய கருத்துக்களைச் செவிமடுப்பதற்கும் மற்றும் அவர்களுடைய தேவைகளுக்கான தீர்வுகளை நாங்கள் தேடுவதையும் உறுதிப்படுத்தலாம். இவ் அணுகுமுறை நீதியையும் சமத்துவத்தையும் ஊக்குவிப்பதுடன், ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய இயற்கை வளங்களின் முகாமைத்துவத்தில் அவர்களும் பங்காளிகள் என்பதை உறுதிப்படுத்துகின்றது.



**"சவால்களை வென்றெடுத்தல்"**

இந்த ஆய்வுச் செயற்பாட்டின் மூலம் பெறுபேறுகள் தெளிவாக அமைவதுடன், சமுதாய அடிப்படையிலான ஆய்வுகள் சவால்களுடன் கூடியதாக அமைகின்றது. ஒழுக்காற்று நடைமுறைகள், அதிகார மாறல்கள் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல் போன்ற முக்கியமான பிரச்சினைகளை கவனமாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். இவ்வாறான சவால்களை எதிர்கொள்ளும் போது ஆய்வுச் செயன்முறையானது நீதியானதும், வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாகவும் பயனுள்ளதாகவும் அமைவதை உறுதிப்படுத்துகின்றது.

**"உண்மையான வாழ்க்கை உதாரணங்கள் மூலம் கற்றுக் கொள்ளல்"**

சம்பவக் கற்கைகள் மற்றும் மக்களின் உண்மையான வாழ்க்கை உதாரணங்கள் மூலம் சமுதாய அடிப்படையிலான ஆய்வுகளில் தீர்மானம்மிக்க வகிபாங்கை வகிக்கின்றது. எதிர்காலக் கருத்திட்டங்களுக்காக பெறுமதியான பாடங்கள் மற்றும் விதந்துரைகளை வழங்கி, உள்ளூர் அறிவை பயனுள்ளதாகப் பயன்படுத்தக்கூடிய விதம் பற்றிய நடைமுறை ரீதியான நுண்ணறிவைப் பெற்றுக்கொடுக்கும். பாரம்பரிய நடைமுறைகளை ஆவணப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் சர்வதேச ரீதியான புதிய தரநியமங்கள் மற்றும் மனித உரிமைக் கோட்பாடுகளுடன் சீரமைக்கப்படுவதுடன், மீன்பிடி முகாமைத்துவத்திற்காக பயனுள்ள அணுகுமுறையை உருவாக்குவதற்கும் ஏதுவாக அமையும்.

அதளால், தெளிவாக மீன்பிடி முகாமைத்துவத்தின் போது, சமுதாய அடிப்படையிலான ஆய்வு மிகவும் பயனுள்ளதும் மற்றும் நியாயமான அணுகுமுறை உருவாக்குவதற்காக உள்ளூர் அறிவை விஞ்ஞான ரீதியான முறைமைகளுடன் ஒருங்கிணைப்பதற்கு ஒத்துழைப்பாக அமையும்.

## ஆய்வு அலகு அறிமுகப்படுத்தல் : NAFSO உடன் இணைந்து பங்கேற்பு ஆய்வை மேற்கொள்ளல்

தேசிய மீவை ஒத்துழைப்பு இயக்கம் (NAFSO) நடாத்தப்படும் எமது புதிய ஆய்வு அலகை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இத்தொடக்க முயற்சிகள் நிலைபேறானதும் மற்றும் நீதியானதுமான வள முகாமைத்துவத்திற்கான உள்ளூர் நுண்ணறிதிறனுடன் விஞ்ஞான ரீதியான ஆய்வை ஒருங்கிணைப்பதற்கு முக்கியமான படிமுறையை ஆரம்பிக்கின்றது.

**இலக்குக் குழு:**

**ஆய்வாளர்கள் :** சமுதாய அடிப்படையிலான மற்றும் மீன்பிடி முகாமைத்துவத்தில் அதனை எவ்வாறு பிரயோகிப்பது என்பது பற்றி அவர்களுடைய அறிவை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நபர்கள்.

**சமூகமட்டத் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் :** மீன்பிடி முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் நேரடியாகப் பாதிக்கக்கூடிய உள்ளூர் பங்காளர்கள்.

**மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்கள்** : பாரம்பரிய அறிவை விஞ்ஞான ரீதியான ஆய்வு முறைகளுடன் ஒருங்கிணைத்தல் பற்றி கற்றுக்கொள்வதற்கு (அறிந்துகொள்வதற்கு)ஆர்வங் காட்டுகின்றவர்கள்.

**ஆய்வு அலகு மூலம் பங்கேற்பு ஆய்வை நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்ற அடிப்படை நோக்கங்கள்**

1. **சமூகங்கள் மற்றும் பங்காளர்களை இணைத்துக் கொள்ளல்**

ஆய்வின் நோக்கங்களை உள்ளூர் தேவைகளுடன் ஒருநிலைப்படுத்துவதற்கு, அணுக்க்கூடிய முறைகளைப் பயன்படுத்தல மற்றும் உள்ளூர் அறிவு முறைமைகளுக்கு மதிப்பளித்து சமூக அங்கத்தவர்கள் மற்றும் பங்காளர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல்.

2. **உள்வாங்கல் மற்றும் விழுமிய ரீதியான நடைமுறைகளை ஊக்குவித்தல்**

ஆய்வுச் செய்ன்முறைக்காக விழுமிய ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான பொறுப்புணர்ச்சியுடனும், எளிதில் பாதிக்கப்படக்கூடிய மற்றும் விளிம்பு நிலையிலுள்ள சமூக அங்கத்தவர்களும் உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்தி, சமூகம் அவர்களை எவ்வாறு உள்வாங்கிக் கொள்வதென அடையாளங் காணல்.

3. **இயலளவு விருத்தியை ஏற்படுத்தல் மற்றும் வலுப்படுத்தல்**

இளைஞர்கள் மற்றும் வயது வந்தோர் உள்ளிட்ட பிரதேச ரீதியாள சமுகத்தவர்களுக்கு ஆய்வுச் செயற்பாடுகளில் முனைப்பாகப் பங்கெடுப்பதற்கும், பரம்பரைகளுக்கு இடையிலான அறிவுப் பரிமாற்றத்தை வலுப்படுத்தும் வகையிலான தோக்க முயற்சிகளை நடைமுறைப்படுத்தல்.

4. **சமூக நல்லாரோக்கியத்தின் மீதான விளைவுகளை மதிப்பீடு செய்தல்**

சமுதாய நல்லாரோக்கியம், வளங்களின் நிலைபேற்றுத் தன்மை, மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளில் சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்.

5. **ஆய்வுக் கண்டுபிடிப்புக்களைப் பகிர்ந்து கொள்ளல்**

அணுகக்கூடிய வடிவமைப்புக்களில் ஆய்வின் பெறுபேறுகள் ஆவணப்படுத்தல் மற்றும் பகிர்ந்து கொள்ளல், கண்டுபிடிப்புக்கள் சமூகத்திலுள்ள பங்காளர்களுக்கு நன்மையளிக்கின்றமையை உறுதிப்படுத்தல் மற்றும் விபரமறிந்து தீர்மானமெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கல்.

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்**

- ❖ கொள்கை வகுப்பாளர்கள், சமூகத் தலைவர்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கு வினைத்திறனான தொடர்பாடல் திறனை விருத்தி செய்தல்
- ❖ ஆய்வுத் தரவுகளைப் பல்வேறுபட்ட பங்காளர்களுக்குப் பொருத்தமான வகையில் செயற்படக் கூடிய நுண்ணறிதிறனாக மாற்றுதல்
- ❖ கதை கூறல் (Story Telling) மற்றும் வரைபடம் வரைதல் போன்ற கட்புல துணைக்கருவிகள் மூலம் கண்டுபிடிப்புக்களைச் சமர்ப்பணம் செய்தல்
- ❖ பாரம்பரிய அறிவுக்கு மதிப்பளித்து விழுமிய ரீதியான மற்றும் உளவாங்கலுடன் கூடிய நடைமுறைகளைப் பாதுகாத்தல்
- ❖ சமூக நீதி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மற்றும் மீன்பிடி முகாமைத்துவத்தில் நீதியும் நிலைபேற்றுத் தன்மையையும் மேம்படுத்தல்
- ❖ சுற்றாடல் பொறுப்புக்கள் மூலம் நிலைபேறான வள முகாமைத்துவத்திற்கான சமூகத்தினரின் இயலளவைக் கட்டியெழுப்பல்
- ❖ சுற்றாடல் மற்றும் சமூக நல்லாரோக்கியத்தின் மீதான சமுதாய அடிப்படையிலான விளைவுகளை மதிப்பீடு செய்தல்.
- ❖ ஆய்வுக் குழுவினர், மற்றும் வேறு குழுக்கள் பிரதேச சமூகங்கள் மற்றும் பங்காளர்களுடன் பங்காண்மையைப் பலப்படுத்தல்
- ❖ நிலைபேறான மீன்பிடி முகாமைத்தும் நடைமுறைகளுக்கான அர்ப்பணிப்புக்களை அதிகரிப்பதற்காக சமூக உரிமைகளை ஊக்குவித்தல்

செயற்பாட்டாளர்களான நாம் நிலத்தில் உள்ள உப்புகளாகும்

உப்பு இல்லாமல் உணவு ருசியாக இருக்காது –

ஆயினும் உப்பு உணவில்

கரையாவிட்டால்

உணவு ருசியாக இருக்காது

உப்பு உணவில் கரைவதை

எமது கண்களால் காண முடியாது

அதேபோலவே மக்களுக்காக நாங்கள்

அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற எங்களுடைய

செயற்பாடுகளும் வெளியில் தென்படாது

இது பரிசுத்த வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்ட

ஒரு உறுப்புரையாகும்

இது தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினுடைய

தூரநோக்கிற்கு அமைவாக உருவாக்கப்பட்டது

செல்லுங்கள் மக்கள் மத்தியிற்கு

அவர்களுடைய அனுபவத்திற்கு அமைவாக தொடங்குங்கள்

கட்டியெழுப்புங்கள் அவர்களிடம் உள்ளதைக் கொண்டு

சனசமூகம் தானாகவெ கட்டியெழுப்பப் பட்டு - தங்களுடைய

சொந்த காலில் நிற்கும் வரை - அவர்களுக்கு

ஒத்துழைப்பு வழங்குங்கள்

செயற்பாடு நிறைவு பெற்றதுடன்

அந்நாளின் இறுதியில் - இந்த

செயற்பாடு எங்களால் செய்யப்பட்டது

என்று மக்கள் கூறுவார்களேயானால்

நீங்கள் மகிழ்ச்சி அடையுங்கள்

ஏனெனில்,

அப்படி மக்கள் கூறுவார்களேயாயின்,

நீங்கள் உங்களுக்குடைய செயற்பாட்டை

சிறப்பாக செய்திருக்கின்றீர்கள்

என்பது கருத்தாகும்- அதனால் நீங்கள் மகிழ்ச்சி அடையலாம்

-சீன வாசகம்-